பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
12 07 2024 **FRIDAY** 7 15**AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்கள் நலன் கருதி ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

2. நடப்பு பருவத்தில் பயறு வகைகளின் சாகுபடி கடந்த ஆண்டை விட தற்போது 50 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. இளநிலை மருத்துவ பட்டப்படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு வினாத்தாளை முன்கூட்டியே வெளியிட்டதாக தொடரப்பட்டுள்ள வழக்கில் **Rakesh Ranjan** என்பவரை சிபிஐ கைது செய்துள்ளது.

4. ஆஸ்திரேலியாவில் இன்று தொடங்கவுள்ள பல்வேறு நாடுகளின் விமானப்படைகளின் கூட்டுப் பயிற்சியில் இந்திய விமானப்படை பங்கேற்கிறது.

5. ஜெர்மனி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஈக்வெடாரின் **Ganzalo Escobar** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

மக்கள் நலன் கருதி ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

மகாராஷ்ட்டிர மாநில சட்டப்பேரவையில் உரையாற்றிய அவர், ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே மக்கள் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் என்று கூறினார்.

மக்கள் நலனுக்காக பணியாற்றுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் ஆக்கபூர்வமான விவாதங்களில் ஈடுபடுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

பேரவை நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் குறுக்கீடு செய்வதை ஊக்குவிக்க வேண்டாம் என்று அனைத்து கட்சியினரையும் திரு. ஜெக்தீப் தங்கர் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

சமூகநீதியை உறுதி செய்யும் வகையிலும், பாகுபாட்டை களையும் வகையிலும் பணியாற்ற வேண்டும் என்று குடிமைப்பணி அதிகாரிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

பல்வேறு அமைச்சகங்களில் உதவி செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய குடிமைப் பணியின் 2022ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த பயிற்சி அதிகாரிகளுடன் அவர் புதுதில்லியில் கலந்துரையாடினார்.

நாட்டிற்கே முதலிடம் என்பது தமது வாழ்க்கையின் நோக்கம் என்றும், இதனை அனைத்து அதிகாரிகளும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து மக்களிடம் எடுத்துரைத்து பணியாற்ற வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

**>>>><<<<**

பிம்ஸ்டெக் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டிற்கிடையே, தாய்லாந்து, மியான்மர் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன், வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் முத்தரப்பு பேச்சு நடத்தினார்.

எல்லையில் நிலவி வரும் சூழ்நிலை, மனிதாபிமான உதவி ஆகியவை குறித்து தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இணையதள குற்றங்கள், போதைப் பொருள் கடத்தல், சட்டவிரோத ஆயுதங்களை கையாளுதல் உள்ளிட்ட குற்ற நடவடிக்கைகளை எதிர்கொள்வது குறித்து தாங்கள் விவாதித்ததாக திரு. ஜெய்சங்கர் சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மியான்மர் வெளியுறவு அமைச்சர் திரு. **U Than Swe-**வுடன் பேசியபோது, எல்லையில் நிலவும் சூழ்நிலை குறித்தும், மக்கள் இடம்பெயர்வது குறித்தும் விவாதித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மியான்மரில் ஜனநாயகம் நிலவ இந்தியா ஆதரவு அளிக்கும் என்று உறுதி அளித்ததாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

நடப்பு கரீப் பருவத்தில் மேற்கொள்ளப்படும் வேளாண் சாகுபடி குறித்து மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் ஆய்வு செய்தார்.

பயறு வகைகளின் சாகுபடி கடந்த ஆண்டை விட தற்போது 50 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

அனைத்து மாநிலங்களிலும் உளுந்து, மைசூர் துவரம் பருப்பு ஆகியவற்றை முழு அளவில் கொள்முதல் செய்ய மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பயிர்களுக்கு உரிய காலத்தில் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு திரு. சிவராஜ்சிங் சௌஹான் அறிவுறுத்தினார்.

>>>><<<<

நாட்டில் மீன்வள மேம்பாடு குறித்த ஆலோசனைக் கூட்டம், மதுரையில் இன்று நடைபெறவுள்ளது.

மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன்சிங், இணையமைச்சர்கள் திரு. எஸ்.பி. பாஹல், திரு. ஜார்ஜ் குரியன், மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் பல்வேறு மாநிலங்களின் மீன்வளத்துறை அமைச்சர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

மீனவர்கள் மற்றும் அது சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோரின் பங்களிப்பை வெளிப்படுத்தவும், மீன்வளர்ப்பு துறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த கூட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீன்வளர்ப்பு துறையில் ஈடுபடுவோர், ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்கள், தொழில்முனைவோர் ஆகியோர் இத்துறை வளர்ச்சிக்கான தங்களது கருத்துக்களையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

மீன்வர்களுடனான உரையாடல், வேளாண் கடன் அட்டை வழங்குதல் உள்ளிட்டவையும் இக்கூட்டத்தின் போது நடைபெறவுள்ளது.

>>>><<<<

இளநிலை மருத்துவ பட்டப்படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு வினாத்தாளை முன்கூட்டியே வெளியிட்டதாக தொடரப்பட்டுள்ள வழக்கில் **Rakesh Ranjan** என்பவரை சிபிஐ கைது செய்தது.

அவரை பத்து நாள் சிபிஐ காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவரை கைது செய்ததன் காரணமாக, நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது தொடர்பாக பல்வேறு தகவல்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து, இந்த வழக்கு தொடர்பாக இதுவரை 12 பேரை சிபிஐ கைது செய்துள்ளது.

சிபிஐ மற்றும் பல்வேறு மாநிலங்களின் காவல்துறையினரும் நீட் உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளில் முன்கூட்டியே வினாத்தாள் வெளியானது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

>>>><<<<

தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தனியார் துறையினர் ஏழு புதிய திட்டங்களை செயல்படுத்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது.

பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறையில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட தொழில்துறையினரை ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, கோயம்புத்தூர், புனே, பெங்களூரு, கொச்சி ஆகிய இடங்களில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா, இன்று மேகாலயா மாநிலம், ஷில்லாங்கில் பயணம் மேற்கொள்கிறார்.

அங்கு வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை, வடகிழக்கு கவுன்சில் மற்றும் மாநில அரசு அதிகாரிகளுடன், அந்த பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து விவாதிக்கவுள்ளார்.

>>>><<<<

ஆஸ்திரேலியாவில் இன்று தொடங்கவுள்ள பல்வேறு நாடுகளின் விமானப்படைகளின் கூட்டுப் பயிற்சியில் இந்திய விமானப்படை பங்கேற்கிறது.

அடுத்த மாதம் 2ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்பயிற்சியில் 20 நாடுகளின் விமானப்படை ஈடுபடுகிறது.

4 ஆயிரத்து 400 விமானப்படை வீரர்களும், 140 விமானங்களும் பயிற்சியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்திய விமானப்படையைச் சேர்ந்த பைலட்டுகள், பொறியாளர்கள் உள்ளிட்ட 150க்கும் மேற்பட்டவர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

>>>><<<<

உடல்நலக் குறைவு காரணமாக, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது, அவரது உடல்நிலை சீராக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

>>>><<<<

ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, அம்மாநிலத்தின் மூன்று மாவட்டங்களில் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அங்கப்பள்ளி மாவட்டத்தில் **Darlapudi** என்னுமிடத்தில் போலாவரம் கால்வாய்த் திட்டம் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் அப்பகுதிகளில் மழை வெள்ள பாதிப்பு கட்டுப்படுத்தப்பட்டு, பாசன வசதிகள் பெருகும் என்று கூறப்படுகிறது.

பின்னர் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய திரு. சந்திரபாபு நாயுடு, போலாவரம் திட்டம் நிறைவடைவதற்கு முன்பாக, புருஷோத்தபட்டினம் மற்றும் புஷ்கரா பாசன திட்டங்கள் மூலம், அங்கப்பள்ளி மாவட்டத்திற்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 500 கனஅடி நீர் கிடைக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

பின்னர், விஜயநகரம் மாவட்டத்தில் போகபுரம் சர்வதேச விமான நிலையத்தை, விமான போக்குவரத்து அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடுவுடன் இணைந்து ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. சந்திரபாபு நாயுடு, போகபுரம் விமான நிலையத்தின் முதல்கட்ட கட்டுமானப் பணிகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் நிறைவடையும் என்று தெரிவித்தார்.

>>>><<<<

உத்தரபிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள **Saharanpur** மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

**Garra** மற்றும் **Khannaut** ஆறுகளின் வெள்ளத்தில் 264 பேர் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர்.

ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண் நிலங்கள் வெள்ளதால் சூழப்பட்டுள்ளனர்.

சுமார் 8 லட்சம் பேர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்னர்.

>>>><<<<

மகாராஷ்ட்ர மாநிலம், கட்சிரோலி காவல்நிலையத்தில் பெண் நக்ஸலைட்டுகள் இரண்டு பேர் சரணடைந்துள்ளனர்.

பல்வேறு குற்ற சம்பவங்களில் அவர்களுக்கு தொடர்பிருப்பதாகவும், அவர்கள் குறித்து தகவல் அளித்தால் 16 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அளிக்கப்படும் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையே, கடந்த இரண்டாண்டுகளில் 21 நக்ஸலைட்டுகள் சரணமடைந்துள்ளதாக கட்சிரோலி காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, நக்ஸலைட்டுகள் வன்முறைப் பாதையை கைவிட்டு, சரணடைந்து, சுயமரியாதையுடன் வாழ வேண்டும் என்று கட்சிரோலி காவல்துறை கண்காணிப்பாளர் திரு. **Nilotpal** கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

ஜெர்மனியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஈக்வெடாரின் **Ganzalo Escobar** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-2 என்ற செட்கணக்கில் பிரேஸிலின் **Demoliner –** அர்ஜென்டினாவின் **Duran** இணையை வென்றது.

>>>><<<<

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Bollipalli Rithvik Choudary – Kaliyanda Poonacha Niki** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 2-6, 6-1, 10-7 என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் **Cervantes -** ஸ்விட்சர்லாந்தின் **Margaroli** இணையை வென்றது.

>>>><<<<

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்திற்கு செக் குடியரசின் **Barbora Krejcikova,** இத்தாலியின் **Jasmine Paolini** ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

>>>><<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

>>>><<<<

இந்திய கிரிக்கெட் அணி, இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அந்நாட்டு அணிக்கு எதிராக மூன்று டிவென்டி டிவென்டி மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

முதலாவது டிவென்டி டிவென்டி போட்டி, இம்மாதம் 26ஆம் தேதி பல்லேகலேயில் நடைபெறவுள்ளது.

>>>>END<<<<